www.prepp.in

Your Personal Exams Guide

TRP

பதிவு எண் / Register No.

# 2018

## மொழிப்பெயர்ப்பு தாள்

## TRANSLATION PAPER

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

SEAL

நேரம் : 3 மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours — Max. Marks : 100

*விண்ணப்பதாரர்களுக்கான பொது குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே. இருப்பினும், விண்ணப்பதாரர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
The facts and particulars provided in the Question paper i.e. the court name, place, case numbers and names of parties are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of solving the questions.

ii) இந்த தாளில் மொத்தம் மூன்று பிரிவுகள் முறையே அ, ஆ, இ உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவை அனைத்திற்கும் விடை அளிக்க வேண்டும். மொத்தம் ஆறு கேள்விகள் தரப்பட்டுள்ளன. அவை ஆறிற்கும் விடை அளிக்க வேண்டும்.
The paper contains three Sections A, B and C. Each section contains two questions and all the questions should be answered. In total six questions will be provided and all the six questions should be answered.

iii) அ பிரிவில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் 20 மதிப்பெண்கள். ஆ மற்றும் இ உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்கள்.
Questions in Section A carry 20 marks each. Questions in Sections B and C carry 15 marks each.

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

# மொழிப்பெயர்ப்பு தாள்

# TRANSLATION PAPER

## பிரிவு அ — (2 × 20 = 40)

## SECTION A — (2 × 20 = 40)

TNPSC - SPECIMEN

1. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :
Translate the following into English :

குற்றத்தின் தன்மையானது, எதிரியால் ஏற்படுத்தப்பட்ட காயம் இருக்குமிடத்தை மட்டுமே பொறுத்து இருப்பதில்லை. ஒவ்வொரு வழக்கிலும் உள்ள எல்லா விவரங்களின் சூழ்நிலைகளையும் கவனமாக ஆராய்ந்த பிறகே காயத்தை ஏற்படுத்திய ஆளின் உட்கருத்தைக் காணுதல் வேண்டும். இந்த வழக்கானது, ஏதோ ஒரு சண்டையின் போது இறந்துபோனவரின் காலை நோக்கி மேல்முறையீட்டாளர் கத்தியை அசைத்தார் என்றும், எதிர்பாராத சூழ்நிலைகளின் காரணமாகத் தமணி வெட்டப்பட்டு மரணம் நிகழ்ந்துவிட்டது என்றும் கூறப்படுவதல்ல. இறந்துபோனவரின் உயிர்நாடியான உறுப்புகளில் காயம் விளைவிக்கவேண்டும் என்ற உட்கருத்தை மேல்முறையீட்டாளர் கொண்டிருந்தார் என்பது இறந்துபோனவரின் நெஞ்சின் பின்புறத்தில் அவர் ஒரு குத்துக்காயத்தை உண்டாக்கினார் என்ற விவரத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. மேல்முறையீட்டாளரால் இறந்தவரின் அரையில் கத்தியால் ஏற்படுத்தப்பட்ட காயமானது தொடையின் இரண்டு குருதிக் குழாய்களையும் துளைத்துச் சென்று 8 செ.மீ. ஆழமுள்ள காயத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், அ.சா. 6 குறுக்கிட முயன்றபோது அவருக்கு மேல்முறையீட்டாளர் குத்துக் காயங்களை ஏற்படுத்தியுள்ளார். அந்தக் காயங்கள் ஒரே மாதிரியாக, அதாவது, ஒன்று நெஞ்சின் பின் பக்கமும் மற்றொன்று அரையின் பாகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன; ஆனால், அந்த இரண்டு காயங்களும் நல்ல வேளையாக மரணத்தை உண்டாக்கவில்லை. இந்தச் சூழ்நிலைகள் அனைத்தையும் கருத்திற்கொள்கின்றபொழுது, மேல்முறையீட்டாளர் அவருக்கு எதிராக இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 302-இன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றத்தைப்பொறுத்துக் குற்றவாளியாவார் என்ற கீழமை நீதிமன்றங்கள் இரண்டும் செய்துள்ள முடிவுகளுடன் உடன்படுவதில் எங்களுக்கு எத்தகைய தயக்கமும் இல்லை.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

2. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :
Translate the following into Tamil :-

TNPSC - SPECIMEN

It is true that in the case of a co-owner, a mere possession, however long it might be, would not constitute adverse possession. It is also true that mere non-participation in the income would not lead to the automatic conclusion of ouster. Possession must be over the statutory period and there must be a clear ouster to the knowledge of the co-owner or the co-heir against whom adverse Possession is pleaded. No detailed discussion by referring to many authorities would be necessary excepting to cite P. Lakshmi Reddy v. L. Lakshmi Reddy, wherein, as to what would constitute knowledge and ouster have been clearly spelt out. In this case, what is the position and whether there are enough averments in the written statement, is the question. Before examining the averments, it is necessary to note what exactly is the case of the first defendant. The case of the first defendant is, by his brother's purchase under the Court-auction proceedings and delivery of possession on 20th March, 1930, he became the owner of the entirety of the C Schedule properties. Consistent with that, he states in paragraph 4 of the written statement that from the time of purchase both his predecessor-in-title as well as he were in possession and enjoyment for a period of forty years and consequent on that uninterrupted possession during that long period, the title of the plaintiff got extinguished by adverse possession. The question of co-heirs or co-owners does not arise at that stage. Therefore, it will be too much to expect the first defendant to plead knowledge or ouster. In other words, only when the title is admitted, the plea relating to ouster should be allowed to be made and proved. But, here is a case where in the first defendant denies title and sets up title in himself by reason of the Court-auction-purchase by his brother. The title of the plaintiff came to be established only on trial. Under these circumstances, there was absolutely no possibility of the first defendant pleading ouster. Nevertheless, what has to be looked into is whether there is enough evidence in this case to prove ouster or knowledge of peaceful possession and enjoyment for over forty years either by the predecessors of the first defendant or by the first defendant himself.



TNPSC - SPECIMEN

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## பிரிவு ஆ — (2 × 15 = 30)

## SECTION B — (2 × 15 = 30)

3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

Revocation of Power of Attorney

WHEREAS, I am the absolute owner and in absolute possession and enjoyment of the property bearing No. 45 Peruma Street, Manapakkam, Chennai-116 admeasuring an extent of 10,400 sq.ft comprised in Survey No. 225/1 at Manapakkam Village more fully described in the Schedule hereunder, hereinafter called the schedule mentioned property.

WHEREAS by virtue of the deed of General power of attorney dated 12.8.91 registered as document No. 562/91 at the Office of the District Registrar, Madras (South), I appointed Mr. Ram son of Siva, Hindu, aged 44 years, residing at No. 22, Sowcarpet, Chennai as my true and lawful attorney to do certain acts, deeds and things pertaining to the Schedule mentioned property.

WHEREAS now, I have decided to look after and maintain the schedule mentioned property myself only, as my Agent is acting detrimental to my interest and also is trying to deceive me with an ulterior motive. Hence I hereby revoke and cancel the General Power of Attorney dt. 12.8.91 executed in favour of the aforesaid Ram and registered as Document No. 562/1991 at the Office of the District Registrar, Madras (South) and WHEREAS the said Mr. Ram not to do anything on my behalf, pertaining to the schedule mentioned property and if any acts seems to be done, the same shall not be binding on me as no power is in existence to do so.

TNPSC - SPECIMEN

4. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

The plaintiff is the only son of the first defendant. Plaintiff and first defendant are the undivided members of the joint family. The property more fully described in the schedule here under is the joint family property of first defendant and the plaintiff. The vacant site of the suit property bearing survey No. 420/1-4/1-S measuring about 2,400 Sq.ft was purchased out of the joint family income derived from the ancestral property. As the first defendant is the father of plaintiff and the Manager of the family, the sale deed was taken in the name of first defendant for the benefit of plaintiff and the Manager of the family, the sale deed was taken in the name of

www.prepp.in

Your Personal Exams Guide

first defendant for the benefit of the joint family. Subsequently the building in the suit property was constructed with the loan amount obtained from the Madras Co-operative House Mortgage Society and with the joint family income. As a matter of fact, the mortgage deeds in favour of the Madras Co-operative House Mortgage Society were executed by first defendant for himself and as Guardian of the Plaintiff. This shows that the suit property was always treated and enjoyed as the joint family property. Later the mortgage debts were discharged with the income derived from the joint family property.

The First defendant has no exclusive title over the suit property. He never exercised or asserted exclusive title or exclusive possession over the suit property. On the other hand, he always treated and enjoyed the suit property as the joint family property. Thus, plaintiff has half share in the suit property and the first defendant is entitled to the other half share.

TNPSC - SPECIMEN

While so, first defendant met with a Motor cycle accident in the year, 1974 and he sustained head injuries. As a result of which he lost his mental balance. Taking advantage of the mental state of first defendant, the father of the second defendant had by maneuvering and illegal designs made first defendant to execute a sale deed dated 15.09.1977 with respect to the suit property, in the name of the second defendant. First defendant was not competent to execute the sale Deed as he was mentally unsound at the time of the execution of the sale deed. Thus, the sale deed is void and invalid. The said sale is sham and nominal and inoperative. The amount mentioned in the said sale is very low. Then the market value of the suit property was Rs. 1,50,000/-. The sale is not for the benefit of the family or for the benefit of plaintiff. In any event, the sale deed is not binding upon the share of the plaintiff. Thus, the suit is filed for Partition of the petitioner's/plaintiff's half share in the suit property, as the 1st defendant acted against the interest of the minor-plaintiff. Hence this suit for partition is in the best interest of the Minor.

The Plaintiff submits that he is not possessed of any property other then the wearing apparels more fully described in the B Schedule. The plaintiff has not disposed of any property within two months next before the presentation of the application. The plaintiff has not entered into any agreement with reference to the subject matter of the suit. The plaintiff has no means to pay court fee for the suit claim. Hence, the petitioner is filing the suit as an indigent person. Therefore, the plaintiff may be permitted to conduct this suit as an indigent person.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## பிரிவு இ — (2 × 15 = 30)

## SECTION C — (2 × 15 = 30)

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :
Translate the following into English :

நான் கதவு இலக்கம் 25-இல் குமாரபாளையம் தெரு பொள்ளாச்சியில் உள்ள வீட்டில் குடியிருக்கிறேன். நான் பொள்ளாச்சி நகராட்சியில் கிணற்று நீர்/பம்ப் ஆபரேட்டராக பணிபுரிகிறேன். சம்பள காலத்தில் நான் பொள்ளாச்சி நகராட்சியில் வாட்ச்மேனாக பணிபுரிந்தேன். நான் வாட்ச்மேனாக பணிபுரிந்த போது ரூ. 1,400/-ம் தற்பொழுது ரூ. 1,700/- சம்பளம் பகல் டூட்டி என்பது காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணியாகும். இரவுப் பணி என்பது மாலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 8 மணி வரை பணிநேரமாகும். சம்பவகாலத்தில் நான் இரவுப் பணியில் இருந்தேன். சம்பவ தினத்தன்று அன்று இரவு 8 மணிக்கு சாப்பாட்டிற்காக சென்றுவிட்டு அன்று இரவு வந்தேன்.

அரசு வழக்குரைஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை அரசு தரப்பில் 28.1.1997 அன்று இரவு பணியில் இருந்தபொழுது, அன்றிரவு 8 மணிக்கு சாப்பிட சென்று விட்டு 8.45 மணிக்கு பொள்ளாச்சி வெங்கடேசா காலனி அப்பர் தெரு வழியாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தபொழுது ஆர்.சி. மருத்துவமனைக்கு எதிரில் கரும்சாம்பல் நிற அம்பாசிடர் கார் நின்று கொண்டிருந்தது என்றும் அந்த அம்பாசிடர் வண்டியில் பதிவு எண். டி.எண். 37.எம்.5067 என்று இருந்ததாக நான் பார்த்ததாக ஆய்வாளர் விசாரணையின் போது நான் கூறியதாகச் சொன்னது தவறு. அன்று இரவு சுமார் 9.30 மணிக்கு வெடிச்சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்த போது ஏற்கனவே அந்த இடத்தில் நின்றுக்கொண்டிருந்த அம்பாசிடர் கார் வேகமாகச் சென்றுவிட்டதாக ஆய்வாளரிடம் சொன்னதாகச் சொல்வது சரியல்ல. எதிரிகள் எல்லோரும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்று சொல்வதும் அதனால் அவர்களுக்குப் பயந்துகொண்டு உண்மைக்கு புறம்பாக பொய்யாகச் சாட்சியம் அளிப்பதாக சொல்வது சரியல்ல.

TNPSC - SPECIMEN

6. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :
Translate the following into English :

பிடபிள்யு 1 என் மாமனார். இறந்துபோனவர் என் கணவர் ஆகும். எதிரிகளைத் தெரியும். என் கணவர் சக்தி விநாயகர் செங்கல் சூளையில் டிரைவராக இருந்தார். எ3-ன் மகன் என் கணவர் ஓட்டிய லாரியில் சரக்கு ஏற்றுவதற்காக வேலை செய்தார். எ3-ன் மகளை என் கணவர் கற்பழித்துவிட்டதாக என் மாமனாரிடம் எ3 கேட்டதாக நான் ஊரில் இருந்து வந்தவுடன் தெரிந்துகொண்டேன். பிறகு நானும் என் மகளும் மேச்சேரி போய்விட்டோம். திங்கள் கிழமை வந்தோம். சுமார் 3 வருடம் முன்பு எ1, எ2 இருவரும் வெள்ளிக்கிழமை சுமார் 4.00 மணிக்கு என் வீட்டுக்கு வந்தார்கள். நான், என் மாமியார், என் கணவர் இருந்தோம். செங்கல் சூளை முதலாளி கூப்பிடுவதாக எ1, எ2 கூப்பிட்டார்கள். பிறகு என் மாமனாரும் போனார். 1, 2 எதிரிகள் என் கணவரிடம் அந்த அமுதாவை திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் கொன்றுவிடுவதாக சொன்னதாக சொன்னார். போலீசார் விசாரித்தார்கள். 2 நாள் கழித்து சவமானது சக்தி சுகர்ஸ் கிணற்று அருகில் கிடப்பதாக தம்பி என்பவர் சொன்னார். நாங்கள் போய் பார்த்தோம். பிறகு என் மாமனார் புகார் கொடுக்க போய்விட்டார். போலீசார் விசாரித்தார்கள்.

www.prepp.in

குறுக்கு விசாரணை : எதிரி மகளுக்கும் என் கணவருக்கும் தொடர்பு உள்ளதாக சம்பவத்திற்கு ஒரு வாரம் முன்பு தெரியும். எதிரி மகளுக்கும் என் கணவருக்கும் தொடர்பு இருந்தது உண்மைதான். அமுதா என்ற பெண்ணை என் கணவர் கெடுத்துவிட்டதாக எதிரிகள் கூறுகிறார்கள் என்றும் அது உண்மை இல்லை என்றும் கூறினார். எங்களுக்குள் தகராறு இல்லை. ஆனால் இது பற்றி பேசினோம். நான் ஊருக்கு போய்விட்டு திங்கள் வந்தேன். அதற்கு பிறகுதான் தெரிந்துகொண்டேன். வெள்ளிக்கிழமை என் கணவரை எதிரிகள் அழைத்து போனார்கள். நான் பிறகு பெற்றோர் வீட்டுக்கு போகவில்லை. என் கணவர் என் பெற்றோர் வீட்டுக்கு வந்தார். அமுதாவுடன் என் கணவருக்கு தொடர்பு உள்ளது என்று என் கணவர் சொல்லித்தான் தெரியும். நான் அந்த அமுதா என்ற பெண்ணை பார்த்துள்ளேன். அமுதா என்ற பெண்ணுக்கு திருமணம் ஆகவில்லை. அவருக்கு 18 வயதுக்கு மேல் இருக்கும். முதல் முறையாக எதிரிகள் எங்கள் வீட்டுக்கு வந்து அமுதாவைத் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னபோது நான் வீட்டில் இருந்தேன். என் கணவர் அமுதாவைத் திருமணம் செய்துக் கொள்வதாக சொல்லவில்லை. ஆனால் நான் ஊருக்கு போய்விட்டேன். ஆனால் நான் தற்கொலை முயற்சியில் ஈடுபடவில்லை. நான் என் பெற்றோரிடம் என் கணவர் விசயத்தை சொன்னேன். என் சகோதரர்கள் என் கணவரிடம் இதுபற்றி எதுவும் விசாரிக்கவில்லை. இந்த சம்பவம் பிறகு நான் என் பெற்றோர் வீட்டுக்கு போன பிறகு என் உடன் பிறப்புக்கள் என் கணவரை இங்கு வந்து மிரட்டினார்கள் என்றால் தவறு. வேறு பெண்ணை என் கணவர் திருமணம் செய்தால் விட்டு வைக்க மாட்டோம் என்று மிரட்டவில்லை. என் கணவருக்கு குடிக்கும் பழக்கம் இல்லை. என் கணவர் வீட்டை விட்டு வெள்ளிக்கிழமை போனார். என் கணவரை வா போகலாம் என்று கட்டாயப்படுத்திதான் கூட்டிப் போனார்கள். நான் அவர் வேலைக்கு போனால் 2 நாள் ஆகும் என்பதால் நானும் அதுபற்றி கவனிக்கவில்லை. எதிரிகள் அழைத்துப் போகவில்லை என்றும் அதனால் போலீசில் பிராது கொடுக்கவில்லை என்றால் தவறு. அதனால் நான் தேடவில்லை என்றால் தவறு. என் கணவர் உடலிலும் ஆடையிலும் வாந்தி எதுவும் இல்லை. பக்கத்தில் இரத்தக்கறை இருந்தது. நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன். நான் என் கணவர் இறந்ததற்கு 12½ வருடம் பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன். நான் வேலைக்கு போகவில்லை.

TNPSC - SPECIMEN

SEAL